**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 328 of 2025 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : முகேஷ்

Father's Name : முருகன்.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது திருப்பூர் மாவட்டம் இடுவாயில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த அய்யம்மாள் எனது அம்மா. கடந்த 22.05.2022-ம் தேதி வீடு பால் காய்ப்பு வைத்திருந்தோம். மேற்படி பால் காய்ப்பு சம்பந்தமாக சொல்வதற்கு நானும் எனது அம்மாவும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் நான் வாகனத்தை ஓட்ட என் அம்மா பின்னால் அமர்ந்திருந்தார். எங்களுக்கு பின்னால் மாமாவும் சித்தப்பாவும் வந்து கொண்டிருந்தார்கள். இடுவாய் பாரதிபுரத்தில் இருந்து பட்டணம் செல்ல பாப்பம்பட்டி பிரிவில் சென்று கொண்டிருந்த பொழுது எங்களுக்கு பின்னால் வந்த லாரி எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதுவிட்டது.

2. நான் இடதுபுறமாக கீழே இருந்து விழுந்து விட்டேன். எனது அம்மா வலது புறமாக விழுந்ததில் லாரியின் பின் சக்கரம் என் அம்மாவின் தலை மீது ஏறிவிட்டது. எனக்கு கையில்

சிறாய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டது. நான் சூலூர் அரசு மருத்துவமனை சென்று முதல் உதவி செய்து கொண்டேன். பிறகு நான் எனது உறவினருக்கும் தகவல் சொல்லி சூலூர் காவல் நிலையம் வந்து எங்கள் வண்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் ஞாபகம் இல்லை. லாரியை ஒட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. எனது அம்மாவின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேதவிசாரணை மேற்கொண்டபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவ நேரம் சரியாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரத்திற்குள் எனது சித்தப்பா மற்றும் மாமா சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் நான் செல்வதற்கு சுமார் 20 அடி பின்பாகவே வந்து கொண்டிருந்தார்கள். நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க எப்பொழுது சென்றேன் என்றால் என்னுடைய அம்மா சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதால் நான் பதட்டத்தில் இருந்தேன். புகார் எப்பொழுது அளித்தேன் என எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய மாமா மற்றும் சித்தப்பா தான் பார்த்துக் கொண்டார்கள். புகாரை பிரதீப்குமார் என்பவர் எழுதினார்.

2. விபத்து நடந்த உடன் சம்பவ இடத்திற்கு சுமார் 15 நிமிடத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்தது. சம்பவ இடமானது பாப்பம்பட்டி பிரிவு குறுகிய பாலம் என்றால் சரிதான். லாரியின் பின் இடது பக்கம் எனது இருசக்கர வாகன கண்ணாடியில் பட்டது என்றால் சரியல்ல. லாரி எனது வாகனத்தை முந்தி இடது புறமாக திருப்பியதால் எனது வண்டியின் கண்ணாடியில் பட்டு நான் வண்டியின் முன்னால் விழுந்து விட்டேன். எனது அம்மா சாலையில் வலது புறமாக வந்து விட்டார். சம்பவ இடத்தில் சிக்னல் உள்ளது என்றால் சரிதான். பட்டணம் செல்வதற்கு சாலையின் நேராக செல்ல வேண்டும் என்றால் சரிதான். சிக்னலில் இருந்து வலது புறமாக திரும்பிச் சென்றால் பாப்பம்பட்டி பிரிவு வரும் என்றால் சரிதான்.

3. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது சித்தப்பா மற்றும் எனது மாமாவை போலீசார் காவல் நிலையத்தில் தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான் எழுதினார். நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் எனது மாமா மற்றும் எனது சித்தப்பா எனக்கு பின்னால் 20 அடியில் வந்து கொண்டு இருந்தார்கள் என சொல்லி உள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. போலீசார் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள், அதன் பின்னிட்டு விசாரிக்கவில்லை. நான் அதிவேகமாக வந்து லாரியின் பின்னால்

மோதிக்கொண்டு என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்ட விபத்திற்கு பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரியன் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 15:03:39 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**